# நுணசையந்தாதி



ஆக்கியோன்
பொன் கந்தசாமி

வெளியீடு: மாதகல் கல்வி அபிவிருத்திச் சபை

நுணசை யந்தாதி
*NUNASAI YANTHATHI*

ஆக்கியோன்: வித்துவான் பொன். கந்தசாமி
Composed by: Vidvan Pon. Kandasamy

முதற் பதிப்பு: சித்திரை 1995
First Edition: April 1995

வெளியீடு: மாதகல் கல்வி அபிவிருத்திச் சபை
Publising: MATHAGAL EDUCATIONAL DEVELOPMENT SOCIETY

உரிமை: ஆசிரியருக்கு
Copy Rights: Author

உதவி: வீரசுப்பிரமணியம் (கனடா)
வில்வளை, மாதகல்
Contribution: Veera Subramaniam (Canada)
Vilvalai, Mathagal

பதிப்பாளர்: திருமொழி அச்சகம், சங்கானை
Printers: THIRUMOLI PRESS, CHANKANAI

1995-05-31

# நுணைசையந்தாதி



வித்துவான் பொன். கந்தசாமி

வெளியீடு: மாதகல் கல்வி அபிவிருத்திச் சபை

உ
குகமயம்

# முன்னுரை

எல்லாம் வல்ல ஐம்முகன் திருக்குமரன் ஆறுமுகன் 'ஆதலின் நமது சக்தி அறுமகன்" என்றதில் சக்தி 'என்பது வேலுக்கு ஒரு பெயர். வேலைப் பிரதிஷ்டை செய்து வழிபடும் தலங்களில் நுணசை முருகன் ஆலயமும் ஒன்றாகும். கலியுக வரதனாகிய முருகன் மீது ஆராத அன்பினாலே நுணசை அந்தாதி என்னும் தோத்திரப் பிரபந்தத்தைப் பாடி முடித்தேன். "இறைவனை நன்றாக தமிழ் செய்குமாறே" என்பது திருமூலர் வாக்கு. தமிழ் என்றால் அன்பு "முருகன் தமிழ் தழீஇய சாயலர் என்று புகழப்படுகின்றார்.

இச் சிறு நூலில் கந்தபுராணம் திருப்புகழ்த் தத்துவங்களும், நுணசைத் தல விசேடம். அந்த ஆலயத் திருப்பணிகள், தொண்டர் தம் பெருமை ஆதியன சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இனிவரும் சந்ததியினரின் நாடி நரம்புகளில் புராணங்கள் தோத்திரங்களுக்கு இடமில்லை. ஓர் உத்தம ஆன்மாவுக்கு கரு இருப்பதற்கு ஏற்ற ஓர் உதரம் இனி இல்லை. புனித ஆன்மா உடம்பெடுக்க நேர்ந்தால் எப்படிப்பட்ட தந்தை தாயரை அது நாடும் என்பதுதான் இன்றைய நிலை.

— ஆசிரியர்

உ

முருகன் துணை

# நுணசை முருகமூர்த்தி மகிமை

மாதகல் நுணசை சம்புல்துறையிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ளது. நுணசையிலுள்ள கடம்பமரம் தலவிருட்சம் எத்தனையோ தலைமுறைக்கு முந்தியது கடம்பமரத்தடியில் வேல்வைத்து பூசை பொங்கல் செய்துவந்தனர். இதனருகில் தாமரைத்தடாகம் தீர்த்தக் குளமாக இருக்கிறது சக்திவேல் உக்கிர மூர்த்தி தடாகத்தில் ஏழு குன்றுகள் ஆழமானவை. இதில் சப்தகன்னியர் நீராடி உச்சிப் போதில் கடம்பனை வழிபடுவர் என்பது ஐதீகம். எனவே இவ்வாலயம் "மூர்த்தி தலம், தீர்த்தம்" விருட்சம், அமைந்தன் அட்டைப்படம். கடம்பன் ஒரு அநுக்கிரக மூர்த்தி.

பருவதம் என்ற பெண் பத்தினி காலத்தில் ஆலயம் கட்டப்பட்டது. மூலஸ்தானம் சம்புல்துறையிலுள்ள சம்புலிங்கேஸ்வரர் அழிந்த கோயில் செங்கற்கள் கொண்டு வந்து கட்டப்பட்டது. சிதம்பரப்பிள்ளை சுவாமிநாதர் காலத்தில் கோயில் திருவிழா நடை பெற்றது. சிதம்பரப்பிள்ளை மகன் கணபதிப்பிள்ளை காலத்தில் மண்டபங்கள் வெள்ளைக்கல்லால் கட்டப்பட்டு உள்வீதிக்கும் கொட்டகை போட்டு ஓட்டினால் வேயப்பட்டது.

வடமேற்கில் அப்பகுதி மக்களால் ஒரு அன்னதான மடம் கட்டப்பட்டு விழாக் காலத்தில் மகேஸ்சுர பூசை நிகழ்ந்தது. அதுபோல வடக்கு வீதியிலுமுள்ள மடத்திலும் நாயன்மார் பூசை மகேசுர பூசை நிகழ்ந்தது.


காவடி என்ற ஒரு பத்தன் பாற்காவடி எடுத்து நேர்த்தி பண்ணி நோயை மாற்றி அரசு. ஆல், மருது, வேம்பு, பூமரம் என்பவற்றை உண்டாக்கி வீதியைச் சோலையாக்கினார்.

திரு சி. கணபதிப்பிள்ளையின் மகனுடைய காலத்தில் கோயில் மறுமலர்ச்சி பெற்றது பூசகருக்கு விடுதிவீடு கட்டிவித்தார் கோயில் பூசைக்குரிய நெற்காணிகளை வாங்கியும் திருத்தியும் செய்தார். கோபுரத்துக்கு தளமிட்டு முடிகல்லு வைத்து மேல் தளத்திற்கு அடிகோலினார்.

திருவிழா சித்திரா பூரணையில் தீர்த்தம் நிகழும் சிவன் தேர் பல சித்திரங்கள் அமைந்தது அதில் நேர்த்திக்காக செய்த ஆறுமுக சுவாமி தேரில் எழுந்தருளுவர். 10ம் திருவிழா உபயகாரர் மஞ்சம் செய்து புதிய முத்துக்குமாரசுவாமியை எழுந்தருளச் செய்தனர். தேர்த் திருவிழாவுக்கு பக்தர்கள் நேர்த்திக்காக எடுக்கும் காவடிகள் அதிகம் அதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான தவில் நாதசுர வித்துவான்கள் வருவதால் பக்தர் கூட்டமதிகம். "முருகன் கலியுக வரதன்" அடியார்கள் நேர்த்தி செய்து பல திருப்பணிகளை வருடா வருடம் செய்து வந்தனர்.

பன்னிருமாதமும் விழாக்கள் நிகழும் அதில் கந்தசட்டியும் வெள்ளிக் கிழமை விரதமும் சிறந்தது. விழாக் காலத்தில் பல சமயப் பெரியார்கள் வந்து சொற்பொழிவுகள் செய்தனர். நூல்களும் வெளியிடப்பட்டன. அதுபோல இன்றும் நுணசையந்தாதி வெளிவரமுன் நிற்கும் முருகன் திருவருளே இந்நூலை மாதகல் கல்வி அபிவிருத்திச்சபை வெளியிடுவது வரவேற்கத்தக்கது இச்சபை தொண்டு வளர்ச்சி பெற முருகன திருவருளைப் பிரார்த்திப்போமாக. குடியில்லாவூரில் கோயில் உண்டு 'இது மக்களின் பேரிழப்பாகும்'.

**உயர்திரு க. பாலசுப்பிரமணியம்**
**தர்மகர்த்தா**



# வாழ்த்துரை

## நுணசை அந்தாதி

96 வகைப் பிரபந்தங்களில் ஒன்றாக விளங்குவது அந்தாதி. அந்தம் ஆதியாக தொடுக்கப்படுவதால் அந்தாதி என்ற பெயரைப் பெற்றது அபிராமி அம்பிகையின் மேல் பாடப்பட்ட அபிராமி அந்தாதியும் கல்வளை விநாயகர் மேல் பாடப்பட்ட கல்வளை அந்தாதியும் யாப்பிலக்கண செய்யுளியலுக்கு முற்றிலும் பொருத்தமாகக் கட்டளைக் கலித்துறையாக அமைந்தவையாகும். இந்த வகையில் இன்னும் பல அந்தாதிகளை நாம் குறிப்பிடலாம். ஆனால் விரிவஞ்சி விடுக்கிறோம்.

நுணசை தந்த வித்துவான் கந்தசுவாமி அவர்கள் தமது வாழ்நாளில் இறைபுகழையே பாடிப்பாடி இன்பம் காண்பவர். நுணசை முருகப்பெருமானிடத்தில் அயராது அன்பு பூண்டவரும் அந்த முருகனின் அடிமையாக வாழ்ந்தவரும் ஆவார். இறை புகழ்பாடும் அருட்பணியில் தற்போது நுணசை அந்தாதி பாடி நுணசைப் பெருமானுக்கு சூட்டிமகிழ முன்வந்துள்ளார். அற்புதமான இயற்கைச் சூழலும் மருத நில வளமும் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டான திருத்தேரும் ஆகம ஒழுங்கு தவறாத கிரியை மாண்பும் கொண்ட திருத்தலம் இதுவாகும். பழமையும் அற்புதமும் கொண்ட இத்திருத்தலம் மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளையும் கொண்டது. வித்துவான் கந்தசுவாமி அவர்கள் பாடி வெளியிடுகின்ற இப்பாமாலையினால் ஆலயத்தின் வரலாறு அடியார்களின் பக்தி மேம்பாடு பூசைகள் விழாக்களின் சிறப்புக்கள் அனைத்தும் உணரக் கூடியதாக அமைந்துள்ளது.

'செந்தமிழ் நாளும் ஓதி உய்ந்திட
ஞானமூறும் செங்கனி வாயில் ஓர்சொல் தருவாயே''

என்ற அருணகிரியின் வேண்டுதலுக்கேற்ப வித்துவான் அவர்களும் தனது ஞானக் கருத்துக்களை நுணசை அந்தாதியாக வெளியிடுவது மிகவும் பாராட்டுக்கு உரியதாகும். இந்த வேளையில் அவன் புகழ் பாடி அவன் திருவடிகளில் நெஞ்சை நிறுத்துவோமாக.

''நுணசையம்பதி மூர்த்தி தலந்தீர்த்தம் மகிமையுறும்
நுணசையம்பதி முதுமைக் கடம்பமரம் மகிமையும்
நுணசையம்பதி தீர்த்தக் குண்டேழும் மகிமையுறும்
நுணசையம்பதி ஞானி சமாதிமகிமையுறும்''

செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

உ

# சிறப்புப்பாயிரம்

திருவளரும் மாதகலூர் செழித்த நுணசை
முருகனந் தாதியெனும் மூத்த - வரலாறு
பொங்குநூல் தந்தான் சீர் பொன்கந்த சாமியெனும்
எங்களருட் செல்வன் இனிது.

இனிய கவிதை இனிய சரிதை
இனிய புராணம் இனிக்கக் - கனிநுணசை
அந்தாதி கண்டேன் அடியார் தமக்கிந்நூல்
சிந்தா குலந்தீர்க்கும் தேன்.

தேன்கடம்பும் தாமரையும் சேர்ந்த பொய்கைத் - [தண்ணுணசை
வான்குலங்கள் வந்திக்க வந்தமர்ந்த மான்குறத்தி
நாதன் நயந்தேற்கும் நன்னூல் இதுசைவ
வேதநிகர் ஞான விருந்து.

சுபம்

ஸ்ரீ நாகவரத நாராயணர்
தேவஸ்தானம்
நாகேஸ்வரம் அளவெட்டி

அருட்கவி
சீ. விநாசித்தம்பி

# அணிந்துரை

மாதகல் பதி நுணசையம்பதி முருகவேள் மீது மெய்யன்பு பூண்ட அருளடியார் வித்துவான் பொன். கந்தசாமி ஆசிரியர் அவர்கள் முருக அந்தாதியை வெளியிட முன்வந்துள்ளார்கள்.

அகண்ட பரிபூரண சத்து சித்து ஆனந்த சொரூபமாய் தேசோமயமாய் என்றும் எங்கும் விளங்கக்கூடிய எல்லாம் வல்ல பரம் பொருளாகிய முருகப்பெருமான் மீது அந்தாதியைப் பாடியருளினார்.

இறைவனது சொரூபத்தில் தோன்றி பிரிந்து இவ்வுலகில் வந்துள்ள ஆன்ம கோடிகள் நாளுக்கு நாள் தன்னையும் இறைவனையும் மறந்து, அறியாமை என்னும் அஞ்ஞானமுற்று, அதனால் இருவினைக்கீடாகப் பிறப்பு இறப்பு என்னும் பவக்கடலில் மூழ்கி அவதியுறுகின்றார்கள். இவ்வித மக்கள் முருக கருணையால் இடர்களைந்து இன்ப வாழ்வைப் பெற வழிகாட்டியாக இவ்வாசிரியர், நுணசை அந்தாதி மூலம் அருட்செல்வத்தை நுகரும் வழியை விளக்குகின்றார்.

இவ்வாசிரியர் சைவ ஒழுக்கம், சைவப்பற்று சமய அறிவு கைவரப்பெற்றவர், இவ்வந்தாதியில்,
''அருள்நாடு மடியார் கழல் தொழுதால் அவர் இன்னல் களைத்து முத்திக்கரை சேர்க்கும் நுணசையூர்'' என முருகப் பெருமானின் கருணைப் பெருந்திறத்தைக் காட்டியுள்ளார்.

இவ்வந்தாதியை; மெய்யடியார்கள் படித்து அநுபூதி பெற வேண்டும் என்னும் அவாவினால், நல்ல பொருள் விளக்கத்துடன் கூடிய செல்வமாக வழங்கியுள்ளார்.

இவ்வந்தாதியின் உட்பொருளை நன்கு அறிந்து வாசிக்கும் அடியார்கள் முருகவேள் அருளைப் பெறுவார்கள் என்பதற்கையமில்லை இலகுவான நடையில், பாமர மக்களும் விளங்கிப் படிப்பதற்கேற்ற வகையில் சொல்லடுக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாசிரியர் இதற்கு முன்பும் பல நூல்களை வெளியீடு செய்துள்ளார்கள் உலக மக்கள் அவரவர் பரிபக்குவ நிலைக்கேற்ப உய்யும் நிமித்தமாக செய்யும் பொருட்கள் தெளிவுறுத்தப்பட்டுள்ளன.

இன்னும் இவ்வாசிரியர் நுணசை எம்பெருமான் அருளால் பல்வேறு நூல்களை ஆக்கஞ் செய்து, மக்கள் பயனடையுமாறு நல்வழியில் செலுத்த முருகப் பெருமான் அருள்புரிவாராக.

'தவாரகை'
சண்டிலிப்பாய்,

வித்துவான் நா. கணபதிப்பிள்ளை
சைவப்புலவர்

# பதிப்புரை

இராணுவ நடவடிக்கையால் மாதகல் கிராமம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது இதனால் கோயில்களில் பூசை நிகழவில்லை மக்கள் நெஞ்சங்களில் நித்திய சோகம் தாண்டவமாடுகிறது. ஆனால் எல்லோர் மனங்களிலும் நுணசை முருகன் திருக்காட்சி அகலவில்லை, கந்தன் காட்சியை விரிக்க, துதிக்க நுணசையந்தாதி வழிகாட்டும். இது துன்பத்தில் துயருறும் மக்களின் எண்ணங்களில் நிம்மதியையூட்டும். இந்நூலை வெளியிட நிதியுதவி புரிந்த திரு. வீரசுப்பிரமணியம் (கனடா) அவர்களின் கொடை பெருந்தன்மையை பேரன்போடு போற்றுகின்றோம் இடம்பெயர்ந்து வேற்றூர்களில் வதியும் நுணசையடியார்க்கு இந்நூலை காணிக்கையாக்குகின்றோம். இன்னும் நுணசையடியார் அவனருள் வேண்டி திருவிழா காலத்தில் நித்திய விரதமிருக்கும் இச்சித்திரை திருவிழாக் காலத்தில் வித்துவானின் இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

**மாதகல் கல்வி அபிவிருத்திச் சபை**

*மாதகல் சென்யோசவ் மகாவித்தியாலய*
*அதிபர்*

## திரு வி. சிற்றம்பலம் அவர்கள்

*வழங்கிய*

# சாற்றுகவி

தீர்த்தம் சிறந்தோங்கு நுணசைப் பதியில்
பூர்வ மகிமைசார் கடம்ப மரத்தடி
சீர்பெற்று விளங்கி அடியார் பிணியறு
மூர்த்த மூலனாய் முருகனைப் போற்றி

தந்திடுவா யருளென சிறுவர் பெரியர்
சிந்தனை கவர்ந்து தீரா ஆவலில்
வந்தனை செய்ய வடிவேல முகன்
கந்தனை மனதில் வைப்பார் தினமும்

நுணசை முருகன் அந்தாதி பாடி
மனசை நெகிழ வைத்தார் வித்துவான்
பொன் கந்தசாமி பொறித்தன ரெண்
சாண் ஹுடம்பு நீக்கும் நனிபணி

சித்திரைத் திருவிழா காணும் முருகன்
பக்தரை உய்விக்க விளைந்திர் நூல்கள்
நித்திய கருமமாம் மனதில் நிறுத்தி
சத்திய வேள்வியாய் கொண்டனர் ஐயா

கலிகாலந் தன்னில் மாதகல் மயில்வாகனன்
புலியூரந் தாதிபாட சிதம்பரனருள் வரும்
பித்தன் முருக னந்தாதி தந்தபின்
வித்தகன் நுணசை யந்தாதி கண்டீர்.

உ

குகமயம்

# நன்றியுரை

இந்நூற் கையெழுத்துப் பிரதியை அச்சிடுவதற்கேற்ற வழியைச் செய்தவர், நாவன்மையும் உயர் பக்தியுமுடைய செஞ்சொல் வாரி திரு வீரசுப்பிரமணியம். அவர்களுக்கு முன்நிற்கும் முருகன் சிவ புண்ணியம் செய்ய அருளுவார்.

முருகன் திருவருள்வழி நாகவரத நாராயண தேவஸ்தான அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர். முன்னிலையில் கையெழுத்துப் பிரதியை வைத்தபோது அன்பு கூர்ந்து பாயிரச் செய்யுளை வழங்கியமை அருள்நெறியாக்க மாந்தன்மைத்து.

நான் அந்தாதியை எழுதும் போது ஊக்கமளித்ததுமன்றி அணிந்துரையும் வழங்கியவர் சைவத் தமிழ்ப் பேரறிஞர், வித்துவான் சைவப்புலவர் நா. கணபதிப்பிள்ளை அவர்கள். அவர் ஆசியுரை இவ் வண்ணம் நல்லவண்ணமாய் அமைந்தது என்பேறு.

மாதகல் சென்யோசவ்மகா வித்தியாலயத்தின் அதிபரும், கல்வி அபிவிருத்திச்சபை தலைவருமாகிய வி. சிற்றம்பலம் B.A. அவர்கள் நாவலர் வாசிகசாலையின் சார்பில் வழங்கிய ஆசிரியப் பணியுரையும் கல்வி அபிவிருத்திச் சபையின் ஆதரவில் வழங்கிய மதிப்புரையும் தாம் இயற்றிய சாற்றுகவியும் இந்நாலுக்கு வாய்த்தமை என்பெறற்கரிய பேறாகும்.

நூல் வெளியீட்டுக்கு பலவகையில் உதவியவரும் சைவத்தை பரவச்செய்ய தமிழ் மொழியை வளர்த்தவரும் ஆகிய கல்வி அபிவிருத்திச்சபை அமைப்பாளர் உயர் திரு ஆ. பொன்னம்பலம் அவர்கள் தொண்டு முருகன் அருள்வழியது.

துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் சுத்த அத்துவித சைவ சித்தாந்தத் தேன்வாரியுமாகிய துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் வழங்கிய அருளாசியுரை வாய்த்தமை முன் நின்று முருகன் இன்னருள் அருளுதலே

சங்கானை திருமொழி அச்சக அதிபரும் ஏனைய அச்சக உதவியாளரும் குறுகிய காலத்தில் திருத்தமாக அச்சிட்டு உதவியமை இன்னருட்பேறு

சங்கானை ஞானம் ஆர்ட்ஸ் அன் அட்வரைசிங் நிறுவன முதல்வர் ஆ. ஞானசேகரம் அவர்கள் வரைந்த அழகிய அட்டை அமைப்பு ஆலயத்தில் ஆதிவரலாற்றை நினைவூட்டுகின்றது

நன்றி சொற்களில் கூற அமையாதது யாவருக்கும் முருகன் திருவருள் பெருகுமாறு பிரார்த்திக்கின்றோம்.

- ஆசிரியர் -

குகமயம்

# நுணசையந்தாதி

●●●●●●●●●●●●●

## காப்பு

ஒருகோ டிருசெவி மும்மதம் நால்வாய் ஐங்கரம்
அருளு மடிகளு ணைவிழி வேழமுக விநாயகன்
முருகன் முன்னோன் உமைமகன் முக்கண் பாலனரி
மருகன் துணையென் நுணசை யந்தாதி பாடுதற்கே.

## துதி

மாதகலி னருள் மிகு நுணசைச் சந்நிதியில்
காதலுற மெய் சிலிர்த் தழுகின்ற வடியார்க்கு
பேதமற வினை தீர்த்து மலரடி சேர்த்தருள்
சீதக்கடம பமர் காளை என்னிடர் நீக்கிடுவர்

## வேறு

ஞான மொழியு ணர்வூறு இயற்றமிழ் கவிஞர்முன்
யானு மிக்கவிதை அருளா லியற்றுந் தன்மையால்
இயன் மொழிப்பொருள் அலங்கா ரமியாப்பு எனும் நன்
நயன் மொழியிலதெ ளினுமிக ழார்நல் அறிஞர்

## நூல்

மன்னன் கசபாகு கண்ணகி சிலையிறக் கியதுறை
மன்னன் அசோகன் மகள்வெள் ளரசிறக் கியதுறை
முன்னாள் சம்புகேஸ் வரால யம்விளங்கு துறையென
இன்னணை பொலிவுற மகிமை யுளது நுணசையே. 1

நுணசை யம்பதி மூர்த்தி தலந்தீர்த்தம் மகிமையுறும்
நுணசை யம்பதி முதுமைக் கடம்பமரம் மகிமையுறும்
நுணசை யம்பதி தீர்த்தக் குளமேழும் மகிமையுறும்
நுணசை யம்பதி ஞானிசமா திமகிமை பெருங்கோயில்

கோயில் கொண்டது ஆதிபாணா வெட்டி யம்மன்பின்
கோயில் கொண்டது வன்னி யடிப்பிள் ளையார் பின்
கோயில் கொண்டன ஐயனார் சிவன் விநாயகர்
ஆயுமா கமநெறி யாயுள இன்னுமா லயங்களுள 3

உண்டு வளர்பனை தென்னை தாழை கமுகு பல
உண்டு பலா மாவிளா வாழை புளி பல
உண்டு நொச்சி புன்னை ஆவரை நுணாவாதிய
உண்டாகி செழுமையுறு நானிலம் நுணசை எனுமூர் 4

ஊரவர் நுணசைக் கடம்படி வேலுக்கும் சமாதிக்கும்
நேரமெ லாம்பொ ங்கிமடை பரவித்தினம் பிணிதீர
நேர்த்தி பலவும் பூர்த்தி செய்வர் அன்னார்க்கு
கார்த்தி கேயன் வேண்டிய வாறருள் செய்குவர் 5

செய்தபணி பலருள் ஒருபெண் பருவத மருள்மிகுஞ்
செயலா லுற்றார் உறவினர் ஊரார் பலர்சேர
ஆயவிதி முறையால் கருவறை மண்டபம் மதிலா
தியன முருகன் திருவரு ளால்கட்டி முடித்தனார் 6

கட்டிய கோயில் மூலமூர்த் தியாக வேலைப்பிர
திட்டை செய்து நித்திய பூசை விழாக்கள்
திட்ட முடனிகழ ஓர்சந் நியாசி சந்நிதியில்
சட்டி திதியில் முத்துலிங் கரையுதவி மறைந்தார் 7

மறைந்து கடம்படி யிலுயர் சமாதி யாகியதும்
நிறைநெய் எண்ணெய் விளக்கேற்றிச்சந் நிதியில்
நிறையு முள்ளத் தோடுதினம் வழிபாடு செய்யும்
குறைவி லாவன்பர் தாம்படு துயரெலாம் நீங்கிடுவர் 8

நீக்கும அடியார் தாமரைக் குளத்தில் நீராடி
காக்கும் கடம்பன் திருவடி யைத்தலைச் சூடிவினை
நீக்கியது காண்பார் பலநேர்த் திகளை விடாதியற்றி
தாக்கும் வினைகள் நீக்கத் தொழ வருவர்தினம் 9

வருகின்ற காலத்தில் திருவரு ளால்வேலைக் கர்ப்பக்
கிருகத்தா லெடுத்து முத்துக் குமார சுவாமியை
கருவறை யில்வைத் தும்பிர திட்டை செய்ததும்
உருத்திர மூர்த்தியாகி வழிபடுவார்க் காலயம் சிறப்பாயது

ஆயநல் மூர்த்தி அந்தமில் ஒளியின் சேயாகி
புயமீரா றும்கரு ணைபொழி கண்கள் ஈராறும்
அயில் வேலும் கச்சைத் திருவடி யும்பச்சை
மயில் வாகன னுமாவன் நுணசை யூர் குமரன் 11

குமரன் முருகன் அவதார தத்துவன் என்றழைப்பர்
அமரரை அலைத்து றுகண் விளைத்த அசுரகுலத்
தமரவரை யழிக்க கயிலை நாதன் தம்மறுதிரு
முகத்தி லிருந்து ஆறுதீப் பொறிகள் உதித்தன 12

உதித்தா று தீப்பொறி யைக்கண்ட தேவர் பதைத்து
நதிசூடு மண்ணலைச் சென்ற டையவதனை எடுத்து
கதியுறு வாயுவிடங் கொடுக்க அதனை தீக்கடவுள்
கொதித்த வெப்பந் தாங்காது பகீரதியி லுய்த்தது 13

உய்த்த பொறியை யன்னவள் நடுங்கி யியலாது
செய்ய சென்னியில் தாங்கிச் சரவணத் திட்டதும்
செய்ய திருவுரு வாறும் அறுமீன் முலையுண்டு
துய்த்துக் குழந்தை களாய்திரு விளையாடல் புரிந்தன 14

புரிந்தறு வர்செயல் கண்ட சிவன் குறுமுறுவல்
புரியும் உமையுடன் சென்று தயிலு மவ்வுருவை
கரத்தி லெடுத்துக் கந்தனெ னப்பெயர் புரிந்து
சுரந்து வருமுலைப் பாலை யமுதாட் டியுவந்தனர். 15

உவந்த திருவுரு ஆகாயம் வாயு நிலம்நீர்
சிவந்த தீயெனும் பஞ்சபூதக் கலப்பா லாயவுரு
பலமிலா சரவணப் பங்கயத் தமர்ந்த ருளியதும்
கவலையுறு தேவரெலா முவந்து இன்ப முற்றனர். 16

பேரின்பக் கந்தன் அருவம் உருவம் அருவுருவாகி
பெருமை யுறுமறு முகனாய் யாவர்க்கு மரியனாய்
கருமுகில் வண்ணனாய் திக்குப் பாலகராய் பண்டிதனாய்
அருமையுறு முருகனாய் நுணசை யிலருள் உருவானான்.

அரியமா மதுரை மேலைப் பரங்குன்று திருச்செந்தூர்
அருணன் மேவுமாவி நன்குடி அருட்டரு ஏரகத்துன்
அருவி தவழ்மலை களில்அரு விபாய்பழ முதிர்சோலை
மருவி விளையாடு நுணசை யூரனை நிதந்தொழுவர். 18

நிதமுறு முச்சிப் போதில் குளத்தில் நீராடி
இதமுறு தேவர்கள் னியரெழு வர்வேல் முருகனை
காதலு டன்வழி படுநாளில் பூசகர் புதல்வியர்
எதிராக கண்டவுட னடுங்கி அழுதழு தஞ்சினர். 19

அஞ்சு முகனரு ளறுமுகன் அளப்பருங் குணத்தன்
அஞ்சு விண்ணவர் சிறையை யகற்றி இந்திரன்
கஞ்ச மலரோன் மால்கலக் கமறவும் அவுணரை
எஞ்சா மலழிக்க வாருவீர ருடனுதித்தா னுணசையூர். 20

உதித்த நவசத்தி வீரருடன் தோமரம் பகழிவாள்
நுதியுறு தண்டு குலிசம் அங்குசம் மழுவில்
ஆதிய பதினொரு உருத்திர படையுடன் சத்திவேல்
ஆதிநாய கனருள சேனாதிபதி யாகவமர் நுணசையூர்.

பதிதனி லமர்தரு கடம்பன் ஊரிலன் பேரிலன்
ஆதியிறு தியிலான் குணமிலன் தமரிலன் சமரிலன்
விதித்திட நிகரிலன் போக்கிலன் வரவிலன் சமனிலன்
ஆதியரு மறையன் அருளுரு வாயுறை நுணசையூர். 22

அருள்நான் மறைக்கு மாகமத் துபநிடதக் திக்கும்
பொருளா யுருவுறு தத்துவன் மூதக்கன் பெரியவன்
ஒருவருக் குமறிவிலன் முன்னவருக்கு முன்னவனாயு
யிருக்கு உயிரா யனைத்து மாயவன் நுணசையூரன், 23

ஊரனுரு வுமாகுவன் அருவு மாகுவ னருள்தர
அருவுரு வுமாகுவன் உருவ மின்மை யுமாகுவன்
அரனய னுமாகுவன் கருமமுங் காரண முமாகுவன்
அரவும ஞ்சமயிலே றியருள் சூாக்குஞ் சீர்முருகன். 24

முருகன் கரண்பவன் காட்சி காட்சிப் பொருளாவன்
உருவுணர் வினைகப் பொறியு மாகும் கருத்தன்
விருளறு ஞானமா யருடரு வள்ளலு மாகுவன்
கருவிலன் முழுதுணா முருகன் காலகல னுமாவன். 25

காலனு மஞ்சும் வேற்படைக் குமரன் இன்னருள்
ஞாலம் வேண்டுவ வேண்டத் தக்கதீ யும்வள்ளல்
காலந் தவறாதவ ரின்வினை தீர்த்து உறையுமிடம்
ஓல மிரு சங்கு தவளை வயல்சூழ் நுணசையூர் 26

நுணசை திருப்பணி மலர்வுறச் செய்யுந் தொண்டர்
பண்டு பழுதுற்ற கோயில் கூரைகள் மண்டபம்
வேண்டு வேறுபல தளம், தூண்கள் வீதிகள்
வண்ண முறுவா கனங்கள் யாவும் செய்திடுவர் 27

செய்யுந் தொண்டர் திருக்குளத்தில் நீராடி யுறுபிணி
மெய்யுறு விடகடி யாகுலம் மனநோய் கன்மம்
உயிருறு வேதனை யாவும் தீரநேர்த்தி பலபண்ணி
அயில் வேற்குகன் திருவடி யழுது தொழுவர் 28

தொழுதுறு தொண்டர் இன்வம் அன்னதான மண்டபம்
செழுமையுறு பூஞ்சோலை, தாகசாந்தி ஆதிய சரியை
பழுதறத் தன்பணி இடைவிடா தன்பொடு இயற்றி
அழுது தொழுத கையுடன் தம்வினை முடிப்பர். 29

முடியாத பிணிதீரக் காவடி என்பவர் தினந்தோறும்
அடியெடுத்துப்பால் காவடி தூக்கிபிடி யரிசியால்
மடங்கட் டியடியா ருக்கமுதும் நிழல்தரு மரங்கள்
அடியார் தங்க வீதிதொறு முண்டாக வளர்த்தார் 30

வளர்பனை தென்னை மாபலா வேம்பு புளியிலுப்பை
நிழல்மர ங்கள்பல செழித்து வளரும் நுணசையூரில்
பழமரத் தைநாடி வருபற வைபோ லடியார்
அழுந்தும் வினைதீர வழுத்தி வடிவேல னருகுறுவர் 31

அருளுறு பிரணவப் பொருளறி யாப் பிரமனை
மருளுறு தலையிற் குட்டிச் சிறையிட்டு
பாரிலுள உயிர்களை முன்போற் படைத்து
திருமகள் நடமிடு நுணசையூ ரமர்ந்தனர். 32

அமரர் துயர்தீர வீரவாகு முதலொன் பதின்மர்
தமரர் பூதவெள்ள மீராயிர மிலக்க வீரருடன்
நாமமுறு தேவசேனா திபதியாய் செம்மலு றுமவுணரை
சமர்புரிந் துசங்கரி த்துதேவர் க்குச்சுரர் உலகருளினார். 33

அருள்புரி திரிபுரன் திருவிளை யாடற்சித் திரத்தேரில
நேர்த்தி கரமூர்த்தி ஆறுமுகன் வள்ளிகுஞ் சரிசமேதர
உருவாய் வீதிவரக் காணுமடி யார்கள் மனமுருகி
உருவுடன் கூத்தாடி மெய்மறந் தாள்தா வெனவழுவர். 34

அன்றமு முயிரெலாம் நின்னருள் இல்வழி நரகிடை
நின்றழுந் துவர்தான் செய்வினை சிறிது முணரார்
கனிதரு மாபலா வாழைமிகு நுணசை யூரனை
உன்னடி தஞ்சமென் றிரங்கி தொழுவர் அநேகர் 35

அளவறி யாவறுமுகன் உணர்வுறு முள்ளத் துறைபவன்
களவொழு க்கநெறியால் வள்ளியை ஆட்கொண்ட
[குருபரன்
உளமுரு கடியார்க் கெளியன் குழவி போல்வன்
வளந்தரு நெல்வயல் நிலம்சூழ் நுணசைப் பதியன் 36

பதியுறு நுணசை நதிசூடு மண்ணல் குமரன்
பதியில் நித்திய பூசைகள் வழுவாது செய்துவர
மதிபெற மாணவரும பயணியர் வறியவர் பிணியரும்
விதிவசம் வந்தவனி விழுந்தயர நிதம் நிகழும் 37

நிகழும் கன்மம் உயிரொடு இணைந்து தம்பயனை
வெகுகால நுகரத் தீராத பிணிகள் தொடர்ந்து
தேகமெலி யுந்தனை உயிர் மயக்கி வருந்தும்
மக்கள் அறுமுகன் திருவடி தொழுது அருளுறுவர் 38

அருள்தரு முருகன் கதிர்கா மம்நல்லூர் சந்நிதி
அருள்மிகு மண்டூர் மாவிட்ட புரத்தும் பேராதனையும்
அருள்புரி யாடல் ஈழத்து ஆறுபடை வீட்டிலும்
அருட்செ யலுமமர வளமிகு நுணசை யிலுமருளுவர் 39

அருளிலர் நானென தெனுஞ் செருக்கற நின்னருட்
பெருக்கு என்றென்று பெறுவன் என்கல் நெஞ்சுகசிந்
துருகுகா முன்னென் பிராரத் துவவினை யினையற
உருக்கி உன்திரு வடியைச் சேர்த்தருள் குகமூர்த்தி 40

மூர்த்தி பிரணவப் பொருளை தந்தைக் குபதேசித்தும்
கீர்த்தி மிகுகுறு முனிக்கு அரியதமிழ் உரைத்தும்
சீர்த்தி தருமரு ணகிரியை தடுத்தாட் கொண்டும்
நிர்மல குமர குருபர னுமைநீக் கியபெருமான் 41

பெருமான் குமரன் முருகன் மூவிரு முகன்மால்
மருகன் சிவைபாலன் கந்தன் கடம்பன் குருபரன்
உருத்திரன் கார்த்தி கேயன் ஏரகன் சரவணபவன்
கருத்துட னுள்ளம் உருவார்க்கு கனவிலருள் தருவேலன்

வடிவேலன் வேதமந் திரரூபன் விசாகன் சேனாதிபதி
கடிகமழ் செச்சையன் ஞானசத்தி யருள்புரி பண்டிதன்
அடல்மிகு மசுரர்பதி பூபாலன் மயூரன் தந்தியூரன்
நடமிகு கடாவேறி நாரதர்க் கருள்புரி மிகுதீரன் 43

தீராத துன்பங் கள்வரும் போதுசர வணன் எனக்கண்
ணீர்வடி யவழுதால் அதுமாற்றும் நுணசை யூரன்
அருளுடைத் தன்னிகர் இல்லாத் தனித்தெய் வம்நீயப்பா
முருகா வென்று உள்நிகழ் அன்பொடு உருகுகிறோம் 44

உருகும் கருணை பொழிமுக மாறும் திருவடியும்
கருவாகி யுழுபோதும் கனவி லும்யான் மறவேன்
ஒருவாத பிறவி நீத்து ன்னருள் பெறுவதற்கு
திருமேனி காட்டி யென்னை ஆண்டருள் தருவாயே 45

அருளுறு மிளமேனிப் பேரழகன் கந்தகிரி உறைவோய்
பெருமை யுறுமீழத் தறுபடை வீடுகளில் அமர்ந்தருள்
அருமை யுறுபெரு வாழ்வு பொங்கும் நுணசையூர
தருவாய் எமக்குச் சிவகதி தேவரைக் காத்தவரே 46

தேவருக் கரசளித்து தேவயானை பரங்குன்றில்
மணந்தாய்
காவலுறு சிற்றூர்க் கிறைவேல் நம்பிக் குறவனது
தவத்திரு மகளான சீர்வள்ளி யைத்தினைப் புனத்தில்
ஆவலுறு திருவுருக் காட்டியே வதுவை செய்தனையே 47

செய்தவத் தால்வலி மைபெறு சிங்கன் சூரபதுமனை
உய்யாது போர்புரிந் தசுரர் குலம்முழு துமழித்த
மையுறு திருக்கண் டன்திருக் குமரனை சுவர்க்கம்
உய்ய உரிமையுறு தேவர் வழிபடு நுணசையூர் 48

ஊரெங்கு நெல்நிறைய விளைவயல் சூழ்பேர் நுணசை
ஊரவர் வந்துதம் வாழ்வு வளம்பெற முக்காலும்
ஏர்பெருகு வயல்வீடு வளவு மாடுகன்று மகப்பேறு
சீர்கல்வி ஆதியன வேண்டுவர் சக்தி வேலவனை 4'

வேல்வைத்து வழிபாடு செய்குவர் சந்நிதி நல்லூரில்
வேல்கண்டு தம்துயர் தீரவீர வாகுதம்பி வழிபட்டார்
வேல்கண்டு வழிபட மாற்றிய வர்நல்லூர் நாவலர்
வேல்கொடு தாரகனை மலையை அவலமுற அழித்தார் 50

அவலமுறு இந்திரன் திருமால் பிரமன் யாவர்க்கும்
உவந்த படிவெந் துயரம் சிறிதுமே இலதாக்கி
உவந்த ருள்புரி யறுமுகன் அழித்தா னசுரரை
நிவந்த முறயாதுதான் முடியா நுணசைக் குமரற்கு 51

குமரன் கலியுகன் கண்கண்ட வைத்திய நாதன்
அமரர் வினைதீர்த் தருளும் வைத்திய நாதன்
தமரொடு மக்கள் வழிபட வினைதீர்க்கு நாதன்
நமன்வர அஞ்சும் அடியாக் கருள்தரு குமரன் 52

தருபங்கை யாசன னாகியுயிர் அனைத்தும் படைப்பாய்
திரையுறு பாற்கடல் மாலுரு வாகிக் காப்பாய்
வெருவுறு உருத்தி ரராகி அழிவு செய்வாய்
திருமகளமரும் வளமலி நுணசை யூருறைவோன் 53

நுணசை யில்காலை மணிஓசை கேட்க எழுந்திடுவர்
கணமே றுந்தரி யாதுஆல யம்சென்று வழிபடுவர்
கணங்கள் தேவர் உச்சிப் பொழுது வணங்குவர்
நுணசை யில்முக் காலும் வந்து அழுவர் அளவிலர் 54

வந்து உருத்திர சர்மராய் களவிய உரைகண்டாய்
முந்து ஞானப்பா லுண்டு திருமுறை பாடினீர்
வந்த அடியார் விழுந்து அழுதுயர் தீர்ப்பீர்
எந்தக் காலமும் வினைதீர் வள்ளல் முருகன் 55

முருகா வெனச் சரணடை வார்க்கு யமனுமஞ்சுவன்
முருகா வெனத் தினமு மோதுவார் வினைகடந்துள
முருகித் தாயணை குழவிபோல் கருணை மிகு
முருக்கு மாபலா மிகுநுணசை விரைந்தடைவர் 56

நீக்கரிய வினைக்கு முருகா என்றால் முன்வருவாய்
தாக்கும் வினையை அளந்து நீதா யானுன்டேன்
போக்கும் வரவும் புரியும் வினையை யாட்கொண்டு
காக்கும் உயிரொடு உறையும் நுணசை யுறையூரா 57

ஊரார் முன்தொழு யானைமுக னுக்குத் தம்பியே
காரூர் இந்திரன் மகளைப் பாங்குன் றில்மணந்தீர்
சீறார் நம்பிதன் மகளைத் தினைப்புன மணந்தீர்
காரூர் மாபலா நீள்சோலை நுணசைப் பதியோனே 58

பதியில் வந்தடி யார்பந்த மறவடி யளித்தும்
விதிமுறை வீதிவலம் பிரதட் சணஞ்செய் கின்றவர்
திதிகாலந் தவறாது உண்ணா விரதம் இருந்தும்
ஆதிசிவ குமரன் திருத்தாள் அருள் பெறுவர். 59

அருளிலா யமனிடி ஏறுபோல் ஓலமிட்டு ஓடிவந்து
கருணை சிறிது மில்லான் எம்முயிரை கவராது
கருணை புரிந்து ஆட்கொள் அருந்துயர் நரகும்
தாராது மறுபிறப் பும்வாராது அருள்தா முருகா. 60

முருகா குமரா குகாசரா வணபவ குருபரமால்
மருகா கைப்போது கொண்டு முப்போது இறைஞ்சி
உருகி உளங்கசி ந்துபுகழ் பாடி நேர்த்திதனை
பூர்த்தி செய்யுமருள் வள்ளல் நுணசைப் பெருமான். 61

பெருமானே முன்செய்த தீவினையை யானறியேன்
அருமாயை தனுகரண புவன போகத்தாற் பிறந்து
உருவாய பிறவியுறு கன்மம் எனைத்தொா டராமல்
கருணை புரிந்து இப்போ தருள்சூர சங்காரா. 62

சங்காரா தீயவை புரிந்தாலும் உன்முன் வருவோர்
நீங்கா இருவினை ஒப்புமல பரிபாகம் வருவித்து
தங்கத் திருவடி சேர்த்து அருள்புரி தன்மையால்
எங்கும் உள்ள மக்கள் வந்தருள் இரப்பர் 63

இரங்கியமு ஊரவர்கள் ஆயிரத்து தொளாயிரத்து
[ தொண்ணூ
றிரண்டாவணி மாதம் வானூர்திஎறி கணையும் செல்லும்
எரிகுண்டும் வந்துவிள எல்லாரும் அஞ்சி ஓடியே
திரளாகத் தங்குமிட மின்றிக் கோயிலுக்கு வந்தனர். 64

வந்தவர்கள் வீடுபொருள் மாடுகன்று உடுபுடவை
அந்தவிடங் களில்விட்டு ஊணின்றி வருந்தினர்
இந்தவிதம் இராணுவத்தால் இடருற்று ஏங்கினர்
கந்தனே என்றழுது புலம்பித்துயி லாதிருந்தனர். 65

இருந்தவிடம் விட்டு அயலூர் ஓடிவந்து பட்டதுயர்
வருத்தமதை எடுத்துரைக்க முடியாது தங்குமிடம்
தரிப்பதற்கு கிடையாது உலகின் றோமிக் கன்மம்
உருத்துவது உமக்கும் ஏற்குமா என்று அழுவர் 66

அழுகின்ற மக்கள் நாயிற்கடை யாய் அலைந்து
அழுந்துவர் அக்காலம் நுணசையால யப்பூசைகள்
முழுதுமில கதவடைத்து இருப்பதுவும் சழக்கன்றோ
உழுந்துருள் கணத்தும் உன்னடியை மறவோமே. 67

மறவாதிருக் கவூரைவிட்ட பெருந்துயர் ஆறாயோடி
வறுமையுற ஆன்மவிசார ரம்முடலை வருத்த
அறந்தவறி என்செய்தேன் கன்மமும் சேர்ந்ததோ
மறவாது நின்சந்நிதி தொழவும் பழுதுண்டோ. 68

பழுதுறு மிடிப்பிணி வாழ்வும் நலிவுறுத்த
அழுதழுது இல்லிருந்து ஓம்புவதும் ஒழுக்காறோ
உழுதூண் தொழுதூண் வினையூண் வழுவுறவே
முழுமுதலே முருகாவென ஓலிடுவர் இக்காலம் 69

இக்காலம் மக்கள் துயர் தீர்த்தருள இரங்காயே
முக்காலும் பூசைசெய்ய காண்பது எக்காலம்
விக்கலும் ஏக்கமும் வருத்தமிக உலைகின்றார்
முக்கண் திருக்குமரா இடம்பெயர்வு தமிழருக்கே 70

பெயர்ந் தோடி வருத்தமுற உற்பாதம் ஏதுமின்றி
அயர்ந்துரை ஏங்குகிறார் நினைக்கவும் அஞ்சுகிறார்
பயந்தமனம் தெளிவுற்று உன்னுணர்வு வரப்பெற்று
மயக்கமறு பெருவாழ்வு பெறுவதும் உன்னருளே. 71

பேறுபெறாத் தேவர்துயர்க் கிரங்கிகொடி யவசுரரை
மாறுபட சூரசங்காரம் செய்துதேவர் வாழ்வைத்
ஊறுறாது தீர்த்தீர்எம் அல்லலையும் நீக்கியருள்
ஆறுமுகங் கொண்ட நுணசையூர் வடிவேலனே 72

வடிவேலா புலவருடன் சங்கத்தில் தமிழுரைத்தா
கடுகுநடை ஔவைக்கு நாவற்கனி கொடுத்தாயே
கடிகாவல் சயந்தனை வீரவாகுவால் மீட்டாயே
விடியாதவிக் கன்மத்தை நீக்கிவிடு நுணசையூர் 73

ஊரில்வரு மடியார்தம் அஞ்ஞானத் துயரகற்றி
கருங்கண்ட தந்தைக்கு மறைஞானம் உரைத்தவரே
ஒருவாத பிறவிநீத்து உனதருளைக் கொடுத்தீர்
பிரியமுடன் மாடுகன்று பால்சுரக்கும் நுணசையூர் 74

சுரந்துவரு திருப்புகழ் தோத்திரம் மெய்சிலிர்த்து
உருவெண்ணி உச்சரித்து பாமாலை புனைந்துசூடி
உருக்கொண்டு கூத்தாடி சரணங்கள் ஒன்றாகிச்
சிரித்திரங்கி சந்நிதியில் திரிகிறார் நுணசையூர். 75

ஊரவர்கள் கோயிற்திருப் பணிகள்பல செய்திடுவர்
பெருகுகாதல் கசிந்துகண் ணீர்மல்கி மெய்மறந்து
ஈரமனமு டையவர்வந் தழுகிறார் எப்போதும்
வருவினைகள் நீக்கியவர் வாழ்வளித்த வேல்கந்தா. 76

கந்தா கடம்பா குமரா என்றடியார்
சிந்தா குலந்தீர பாங்கில் அஞ்சலித்து
பந்தங் களையநல் நலவரமீயும் நுணசையில்
நந்தா விளக்கென விளங்கும் முருகேசனே. 77

முருகன் கலியுகத்துக் கண்கண்ட கருணாகரன்
உருகா கல்மனத்தார் அவனருளை உணராரோ
நிருதரை ஞானசக்தி அளித்ததுவும் உன்னருளே
கருத்துறு ஊரவரைக் காப்பதுவும் உன்பணியே. 78

உன்பணியே மயிலேறி பழநியில் அமர்ந்தருளி
உன்னருளே மணிமந்திரம் பழநியில் பணிவார்க்கு
உன்னருளே ஆற்றுப்படை நக்கீரர் பாடியதும்
உன்னருளே முன்னாக வேண்டிட ஓடிவருவாயே. 79

வந்தழுது தமிழ்த்தெய்வம் என்றுன்னைத் துதிக்கிறார்
பந்தமறு பாமாலைசூட்டி சரவணபவ என்றோதுவர்
வந்திக்கு மடியார்க்கு வரமருளும் நுணசையூரா
பந்தித்த சித்தமலம் அறுப்பதுவும் நீரலவோ. 80

நீரலவோ ஆறுபடை வீட்டிலமர்ந் தருளுவீர்
நீரலவோ ஆண்டியாய் பழநிக்குச் சென்றீரலவோ
நீரலவோ அசுரர்கதை வியாசரிடம் கேட்டீரா
நீரலவோ ஆதிக்கடம்பி லமர்ந்தருள் முருகவேள். 81

முருகவேள் பிரணவத்தின் நுண்பொருள் அறிந்தவன்
முருகவேள் அகத்தியர்க்கு தமிழ்மொழி ஓதியவராம்
முருகவேள் அவயமே தமிழ்மொழி உருவமாம்
முருகவேள் உருத்திர கணங்களின் படையுடையார். 82

படையாறும் தொழுவார்க்கு தலங்களாய் திகழ்ந்திடும்
படையாறும் திருக்கரத்தில் எப்போதும் திகழ்ந்திடும்
படையாறப் பிரமனைச் சிறையில் இடுவித்தீர்
படையாற மிகவிரைவில் அசுரரைச் சங்கரித்தீர். 83

சங்கார மூர்த்தியாய் தேர்வீதி வலம்வரும்
சங்கரன் திருக்குமரன் ஆறுமுகம் கருணைவழிய
மங்காத பத்தர்கள் அரகரவென் றாரவாரித்து
ஓங்கார ஒலிவானளாவ பாடியாடுவர் நுணைசையூர் 84

ஊரிலுள்ள நோயாளர் மனம்வருந்தி தடுமாறி
ஊரிலெங்கு ம்பிணிதீர அலைந்துலைந் தபின்னரே
ஆருந்துணை யின்றிதுயர் மிகுந்து நுணைசையூர்
மருந்தென வந்துன்னடி வணங்குவர் பக்தியுடன். 85

பக்தியுடன் புராணம் படிப்போர் இன்றுமுன்னடி
பக்தியுடன் கேட்போர் மரபுகள் இன்றுமுண்டு
சித்தமுருக நாவலர் மரபிலுளர் பெருநரையால்
சித்தமுருக புராணம் படிக்கின்றார் நுணைசையூரில். 86

நுணைசவேல் தொழுவதே அடியார்க்கு முழுவேலை
நுணைசைவேல் சூரனுடல் கூறாக்கியது வேறையிலே
நுணைசவேல் அடியார்க்கு அஞ்சுவதும் யமதூதர்
நுணைசவேல் தஞ்சமென்று ஆறுதலை வந்தணைவர். 87

ஆறுமுகன் மாறுமுகன் அண்ணன் கணபதியே
ஆறுமுகன் அஞ்சுதலை காலகண்டன் சிவகுமரன்
ஆறுமுகன் ஆறுபெண் பாலமுது பருகினான்
ஆறுமுகன் நுணைசையில் வந்தணுகுவர் ஆறுதலை. 88

அணுகுகின்ற மாடுகன்று முருகாவென ஒலமிடும்
அணுகுமுறை அறிந்தவர் சணிவாசல் ஒலமிடுவர்
அணுவளவு திருப்பணி செய்பவர் ஒலமிடுவர்
அணுவளவு காலத்தில் நினைப்பவர் கதிபெறுவர். 89

கதிதரும் திருப்புகழ் கலிவெண்பா அநுபூதி
பதிகமுறு புராணம் அந்தாதி பிள்ளைத் தமிழ்
அதிமதுரப் பாமாலை தொடுத்து அணிந்தோர்
அதியற்புத திருவடிப் பேரின்பச் சுகமுறுவர். 90

சுகவாழ்வு பெறவடியார் மிகுநேர்த்தி பலசெய்து
இகவாழ்வு சோறுமகவு பணம்வீடு மிகப்பெறுவர்
அகவாழ்வுப் புலன்ஒடுக்கி ஞானநெறி முதிர்வுற்று
சுகபோக வாழ்வுற நுணைசையூர் அணுகுவர். 91

ஊரிலுள்ள தொண்டர் திருப்பணி செய்வதற்கு
இரவினிலே முருகன் கனவிலே தோன்றியே
விரும்பிய கொடுத்து உடனே மறைந்திடுவர்
நீரொழு கண்ணுடனே துயிலுணர்வர் துடிதுடித்து. 92

உணர்வூறு மனிதர்கள் மக்கள்மனை வேண்டுமென
உண்ணாது ஆறுநாள் விரதமிருப் பர்சட்டி
விண்ணவர் முனிவர் சட்டிதனை அனுட்டித்து
விண்ணுலகு மண்ணுலகு அரசாள்வர் நெடுகாலம். 93

காலமெலாம் வணங்குவதே தொண்டர் பணியாம்
காலனஞ்சு சூருடலைப் பிளந்ததும் சட்டியிலே
வேலவன் சட்டிவிரத மனுட்டித்து மகப்பெறுவர்
ஞாலமெலாம் ஞானவேலை கந்தனென வணங்குவர். 94

கந்தன் பூசையினை காலைமாலை வணங்கிடுவர்
கந்தன் அர்ச்சகர் நியதியுடன் பூசைபுரிவர்
கந்தன் குழந்தையை காசுக்கு வாங்கிடுவர்
கந்தன் நுணைசையூர் கடம்படி ஆதிமூர்த்தி. 95

மூர்த்திக்கு பூரணைக்கு முன்பதினொரு தினம்விழா
பூர்த்தியாக மக்கள் ஆசாலசீல ராகிப்புலால்
உருக்கும் பாத்திரத்தை எறிந்துவிட்டு புதிதில்
அருசியிட்டு ஆக்கியுண வுண்டுவிரத மிருப்பர். 96

விரதமிருந்து நேர்த்திக்கு பாற்காவடி வேல்காவடி
கரகக்காவடி தூக்குக்காவடி தேர்க்காவடி பாட்டுக்காவடி
பிரதிட்டை காவடிதாளக் காவடியாவு மெடுத்து
நிரையாக வரக்கண்டு பார்த்தவரும் கூத்தாடுவர். 97

கூத்தன்குகன் தேரில்வர மெய்சிலிர்த்துக் கூத்தாடுவர்
தாத்தாத்தா வென்றுகுறை இரப்பர் தீமிதிப்பர்
காத்தருளத் தேங்காய் உடைப்பர் பார்ப்பவரும்
பத்தராய் மனமுருகி வடம்பிடித்து வலம்வருவர். 98

கந்தநம குமாரநம முருகநம குகாநம
எந்தைநம வேலாநம கடம்பநம மயூரநம
அன்னைமகிழ் பாலாநம விசாகநம நாதாநம
செந்தமிழ் சொரூபநம காங்கேயநம நுணசையூர்நம. 99

மூவிருமுகங் கள்வாழ்க முகம்பொளி கருணைவாழ்க
சேவலும்மயி லும்வாழ்க வள்ளிகுஞ் சரிவாழ்க
தேவசேனாதி பதிவாழ்க சக்திவடி வேல்வாழ்க
தேவரும் துதிக்கும் நுணசையூரன் திருவடிவாழ்க. 100

ஓம் சரவணபவ நம

குகன் துணை





மாதகலில் சிறந்து விளங்கும் அறிஞர் வித்துவான் பொன். கந்தசாமி எளிமை வாழ்வு வாழ்பவர். தன் பெரு முயற்சியால் தமிழும், சைவமும் முறையாகக் கற்றவர். பல்லாண்டுகளாக தமிழாசானாக யா மாதகல் சென் யோசவ் ஆங்கிலக் கல்லூரியில் சிறந்து விளங்கினார். தம்பணி சமயப் பணியே என்பதை மனதில் நிறுத்தி முருகனடியார் நல்வாழ்வு பெற்றுய்ய பலநூல்கள் ஆக்கியும், தொகுத்தும் மாணவர் நலன்கருதி தமிழ் மொழிப் பயிற்சி நூலை எழுதியும் வெளியிட்டார். ஆக்கிய நூல்களில் கந்த புராணக் கதையமுதம், கோயில் அமைப்பும் கிரியைகளும். வள்ளி திருமண ஞானநெறி விளக்கம், முருகமூர்த்தி பிள்ளைத் தமிழ், கந்தபுராண அக்கினிமுகாசுரன் வதைப் படலம் உரை என்பன நினைவில் நிற்பவை. இவர் பணியில் சிறந்து ஆண்டு பலப்பல வாழ முருகன் பொற்றாள் மலரடி வாழ்த்துதும்,

**நாவலர் சனசமூக நிலையம்**
**மாதகல்**